**14/12/2023**

**OS. No.57 /2022**

**பி.வா.சா.1. ஸ்ரீராமன்**

**முதல் விசாரணை தொடர்ச்சி**

நான் இந்த வழக்கில் 1 ஆம் பிரதிவாதி. பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன். அதிலுள்ள விவரங்கள் தெரியும். அதிலுள்ள கையெழுத்து என்னுடையதுதான். என்னுடைய பத்தாம் வகுப்பு மதிப்பெண் பட்டியல் நகல் பி.வா.சா.ஆ.1. என்னுடைய பள்ளி மதிப்பெண் சான்றிதழ். பி.வா.சா.ஆ.2 ( மேற்படி ஆவணம் அசலுடன் ஒப்பிட்டு பார்த்து பிரதிவாதியிடம் ஒப்படைக்கப்பட்டது ) ( மேற்படி ஆவணங்கள் வாதி தரப்பு ஆட்சேபனை குறியீடு செய்யப்படுகிறது )

**வாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

என்னுடைய தந்தை பெயர் வரதராஜன். தாயார் பெயர் கலா. வழக்கு விவரங்கள் எனக்கு தெரியும். என்னுடைய தாயார் கலா 1986 ல் இறந்தார். தேதி மாதம் எனக்கு தெரியாது. நான் என்னுடைய தாயார் 1986 ல் இறந்தததற்கான இறப்பு சான்றிதழ் தாக்கல் செய்யவில்லை. என்னுடைய தாயார் 1986 ல் இறந்து விட்டதாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. என்னுடைய தாயார் 10.08.1976 ல் இறந்து விட்டார் என்றால் சரியல்ல.

என்னுடைய பிறப்பு சான்றிதழை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் 15.02.1977 ல் பிறந்ததாக என்னுடைய பள்ளி சான்றிதழில் பள்ளிறில் சேர்ப்பதற்காக தோராயமாக போடப்பட்ட தேதி என்றால் சரியல்ல. 1 ஆம் வாதியின் சகோதரி பத்மாவதியை என்னுடைய பெரியப்பா கோவிந்தசாமி என்பவர் திருமணம் செய்து கொண்டார் என்றால் சரிதான்.

அப்போது 1ம் வாதி அவருடைய சகோதரி பத்மாவதியை அடிக்கடி

பார்க்க வரும்போது என்னுடை தந்தையுடன் பழக்கம் ஏற்பட்டு சட்டத்திற்கு புறம்பாக திருமணம் செய்து கொண்டதாக வாக்குமூலத்திலுள்ள சங்கதி பொய்யானது என்றால் சரியல்ல. வாதி திருமுக்கூடலில் வசிக்கிறார்கள் என்றால் சரியல்ல. எப்போதாவது அவருடைய அக்கா வீட்டிற்கு வந்து போவார்கள். என்னுடைய தந்தையாரின் சொத்துகள் என் பெயரில் உள்ளது என்றால் சரிதான். 1ம் வாதி நிரந்தரமாக திருமுக்கூடலில் வசித்து வருகிறார் என்றாலும் தற்போது வாடகை வீட்டில் வசித்து வருகிறார் என்றால் சரியல்ல.

என்னுடைய தாயார் 10.08.1976 ல் இறந்த பிறகு எனக்கு ஒரு வயதிருக்கும் தருவாயில் என்னுடைய தந்தை 1ம் வாதியை 1977 ல் சட்டப்படி திருமணம் செய்து கொண்டார் என்றால் சரியல்ல. 1ம் வாதிக்கும் என்னுடைய தந்தைக்கும் நடந்த திருமணம் முறையில்லா திருமணம் இல்லை என்றாலும் சட்டப்படியான திருமணம் என்றாலும் சரியல்ல. சொத்துகளை அபகரிக்க வேண்டும் என்று நான் பொய்யாக சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள ஆவணங்களுக்கும் இந்த வழக்கிற்கும் சம்பந்தமில்லை என்றால் சரியல்ல.